03. 03. 2021 புதன்கிழமை காலை 07 .15

தலைப்புச் செய்திகள்

1. நாடு முழுவதும் இதுவரை ஒரு கோடியே 54 லட்சம் பேருக்கு கோவிட்-19 க்கான தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

2. 4 ஜி அலைக்கற்றை ஏலத்தில் 77 ஆயிரத்து 814 கோடி ரூபாய் மதிப்பிலான அலைக்கற்றைகள் ஏலம் விடப்பட்டுள்ளதாக தொலை தொடர்பு அமைச்சகம் கூறியுள்ளது.

3. ரபி பருவத்தில் 427 லட்சம் மெட்ரிக் டன் கோதுமையும், 119 லட்சம் மெட்ரிக் டன் நெல்லும் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. தமிழக சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு கூட்டணி கட்சிகளுடன் தொகுதி பங்கீட்டை இறுதிபடுத்தும் முயற்சியில் அரசியல் கட்சிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

5. சுவிஸ் ஓபன் பேட்மின்டன் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் அஸ்வினி பொன்னப்பா – சாத்விக் சாய்ராஜ் ரங்கி ரெட்டி இணை இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

நாடு முழுவதும் இதுவரை ஒரு கோடியே 58 லட்சம் பேருக்கு கோவிட்-19 க்கான தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

நேற்று ஒரே நாளில் ஆறு லட்சத்து ஒன்பதாயிரம் பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாகவும், சுகாதாரத்துறை கூறியுள்ளது.

இதனிடையே புதுதில்லியில் கூட்டாக செய்தியாளர்களிடம் பேசிய சுகாதாரத்துறை செயலாளர் திரு ராஜேஷ் பூஷன், நித்தி ஆயோக் உறுப்பினர் டாக்டர் வி கே பால், கோவிட்-19 தடுப்பூசி நிர்வாகத்திற்கான அதிகாரமளித்தல் குழுவின் தலைவர் திரு ஆர் எஸ் சர்மா ஆகியோர் கோவின் வலைதளத்தில் தடுப்பூசிக்காக முன்பதிவு செய்வதில் எந்த சிக்கலும் இல்லை என்று தெரிவித்தனர்.

இணை நோய் உள்ள 45 வயது முதல் 59 வயது உள்ளவர்கள் மற்றும் 60 வயதுக்கும் மேற்பட்டவர்கள் சுமார் 50 லட்சம் பேர் முன்பதிவு செய்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆரோக்கிய சேது செயலி வழியாகவும் தடுப்பூசிக்கு முன்பதிவு செய்து கொள்ளலாம் என்று அவர்கள் கூறினர்.

<><><>

கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்ற 4 ஜி அலைக்கற்றை ஏலம் நேற்று நிறைவடைந்தது.

ஐந்தாண்டுகளுக்கு பிறகு நடைபெற்ற இந்த ஏல நடைமுறையில் நான்கு லட்சம் கோடி ரூபாய் மதிப்பில் இரண்டாயிரத்து 250 மெகா ஹெர்ட்ஸ் அலைக்கற்றை ஏலம் விடப்பட்டதாக அரசு தெரிவித்துள்ளது.

இதில் 855 மெகா ஹெர்ட்ஸ் அலைக்கற்றைகள் 77 ஆயிரத்து 814 கோடி ரூபாய்க்கு தனியார் தொலை தொடர்பு நிறுவனங்களால் ஏலம் எடுக்கப்பட்டுள்ளதாக தொலை தொடர்புத்துறை அமைச்சகம் கூறியுள்ளது.

<><><>

பொம்மை வர்த்தக துறையை நீண்டகால வளர்ச்சிக்கான முக்கியத்துறையாக அரசு கண்டறிந்துள்ளது என்று தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஸ் கோயல் தெரிவித்துள்ளார்.

இணையதளம் வாயிலாக நடைபெற்ற பொம்மை கண்காட்சியின் நிறைவு நாள் நிகழ்ச்சியில் நேற்று மாலை பங்கேற்று பேசிய அவர், இந்திய பொம்மைகள் உலக அளவில் மிகப்பெரிய வரவேற்பை பெற்றுள்ளதாக கூறினார்.

கலாச்சாரத்தையும், பாரம்பரியத்தையும் எடுத்துரைக்கும் இந்திய பொம்மைகள் குழந்தைகளின் திறன்களை வளர்க்கவும் உதவுவதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த பொம்மை கண்காட்சி கைவினை கலைஞர்கள், சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்கள், ஸ்டாட் அப் நிறுவனங்கள் உள்ளிட்ட பலருக்கு மிகப்பெரிய வாய்ப்புகளை ஏற்படுத்தி தந்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியின் போது பேசிய ஜவுளித்துறை செயலாளர் திரு யு பி சின்ஹா, இணையதளம் வாயிலான பொம்மை கண்காட்சி நேற்றுடன் நிறைவடைவதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், பல்வேறு தரப்பினரின் கோரிக்கையை ஏற்று நாளை வரை நீடிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

<><><>

எல்லை தாண்டிய பயங்கரவாதத்திற்கு ஆதரவளிக்கும் நடவடிக்கையை பாகிஸ்தான் நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று ஐ நா மனித உரிமைகள் ஆணையத்தில் இந்தியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது. அந்த ஆணையத்தின் 46-வது கூட்டம் ஜெனீவாவில் நடைபெற்று வருகிறது.

இக்கூட்டத்தில் பேசிய இந்திய பிரதிநிதி திரு பவன்குமார் பாதே, பயங்கரவாதிகளாக அறிவிக்கப்பட்வர்களுக்கு பாகிஸ்தான் அரசு நிதியுதவி வழங்கி வருவதாக குற்றம் சாட்டினார்.

ஐ நா-வால் பயங்கரவாதிகள் என்று பிரகடணம் செய்யப்பட்டவர்களுக்கு பாகிஸ்தான் அரசு ஆதரவளிப்பதுடன், அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

<><><>

இந்திய சமுதாயத்தினர் 27 நாடுகளில் இருந்து தாயகம் திரும்ப அந்த நாடுகளுடன் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டுள்ளதாக சிவில் விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு ஹர்தீப்சிங் பூரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக டுவிட்டரில் பதிவிட்டுள்ள அவர், சவுதி அரேபியா உள்ளிட்ட சில நாடுகள், இந்தியர்கள் பயணம் மேற்கொள்ள கட்டுப்பாடுகளை விதித்துள்ளதாக கூறியுள்ளார்.

எனினும், அந்த நாடுகளில் இருந்து இந்தியர்கள் தாயகம் திரும்ப வந்தே பாரத் இயக்கத்தின் மூலம் தொடர்ந்து விமானங்கள் இயக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

<><><>

நாடாளுமன்ற செய்திகளை வழங்கும் லோக்சபா தொலைக்காட்சி மற்றும் ராஜ்யசபா தொலைக்காட்சி ஆகியவற்றை ஒருங்கிணைத்து புதிதாக ஒரு தொலைக்காட்சியை உருவாக்கும் பணிகள் தொடங்கியுள்ளதாக மக்களவை செயலகம் கூறியுள்ளது.

ஒருங்கிணைக்கப்பட்ட இந்த தொலைக்காட்சி சன்சத் தொலைக்காட்சி என்று பெயரில் இயங்கும் எனவும், இதன் தலைமை செயல் அலுவலராக ஓய்வு பெற்ற அதிகாரி திரு ரவி கபூர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடியரசு துணைத்தலைவரும் மாநிலங்களவை தலைவருமான திரு வெங்கய்யா நாயுடுவும், மக்களவை தலைவர் திரு ஓம் பிர்லாவும் அமைத்த குழுவினர் வழங்கிய அறிக்கையின் அடிப்படையில் புதிய தொலைக்காட்சி உருவாக்கப்படுவதாக கூறப்பட்டுள்ளது.

மக்களவை மற்றும் மாநில்ங்களவை நிகழ்வுகள் நடைபெறும் போது புதிய தொலைக்காட்சியில் தனித்தனி அலைவரிசைகளில் நேரடி ஒளிபரப்பு செய்யப்படும் என்றும், மற்ற நேரங்களில் இரு தொலைக்காட்சிகளிலும் ஒரே நிகழ்ச்சிகள் இடம்பெறும் எனவும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

<><><><>

தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் அடுத்த வாரம் தொடங்க உள்ள நிலையில், கூட்டணியில் தொகுதிப் பங்கீட்டை இறுதிப்படுத்தும் முயற்சியில் அரசியல் கட்சிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

அஇஅதிமுக தலைமையிலான கூட்டணியில் தொகுதிப் பங்கீடு தொடர்பாக அக்கட்சி பிஜேபி, தேமுதிக உள்ளிட்ட கட்சிகளுடன் பேச்சு நடத்தி வருகிறது.

திமுக தலைமையிலான கூட்டணியில் அக்கட்சி காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், மதிமுக உள்ளிட்ட கட்சிகளுடன் தொடர்ந்து பேச்சு நடத்தி வருகிறது.

திமுக – காங்கிரஸ் இடையிலான தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை ஓரிரு நாளில் முடிவடையும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு கே எஸ் அழகிரி தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும், இரண்டு நாட்களில் ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்றும் கூறினார்.

<><><><>

ரபி பருவத்தில் 427 லட்சம் மெட்ரிக் டன் கோதுமை கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக உணவு மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை செயலாளர் திரு சுதான்ஷு பாண்டே தலைமையில் ஆய்வுக்கூட்டம் புதுதில்லியில் நடைபெற்றது.

கடந்த ஆண்டை விட 10 சதவீதம் கோதுமையை இந்த ஆண்டு கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதேபோல் கூடுதலாக சுமார் 25 சதவீதம் நெல் கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாகவும், கூட்டத்தில் கூறப்பட்டது.

கடந்த ஆண்டு ரபி பருவத்தில் 96 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டதாகவும், இந்த ஆண்டு 119 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

<><><>

ஒடிசா மாநிலம் சிம்லிபால் புலிகள் காப்பக வனப்பகுதியில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீயை அணைக்க உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு பிரகாஷ் ஜவடேகர் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான், ஏற்கனவே வேண்டுகோள் விடுத்திருந்த நிலையில், திரு பிரகாஷ் ஜவடேகர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

<><><>

மியான்மரில் கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒரு குழுவினர் பொறுப்பு அமைச்சர்கள் என்ற பெயரில் புதிய அமைச்சர்கள் பட்டியலில் வெளியிட்டுள்ளனர்.

ராணுவ ஆட்சியை அகற்ற வேண்டும் என்றும், திருமதி ஆங் சாங் சூகி கைது செய்யப்பட்டிருப்பது சட்ட விரோதமானது என்றும் அந்தக் குழுவினர் கூறியுள்ளனர்.

இதனிடையே, நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் இந்த தன்னிச்சையான நடவடிக்கைக்கு ராணுவ அரசு கண்டனம் தெரிவித்துள்ளது.

அந்த குழுவினரின் செயல்கள் சட்ட விரோதமானது என்றும், இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டால், கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ராணுவ அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்நிலையில் ராணுவ ஆட்சிக்கு எதிராக மியான்மரில் பல்வேறு பகுதிகளில் தொடர்ந்து போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

போராட்டங்களின் போது இதுவரை மொத்தம் 21 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

<><><>

இந்தியா – ஜெர்மனி இடையிலான இரண்டாவது ஆடவர் ஹாக்கிப் போட்டி 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

இந்தியாவின் ஜர்மென்ப்ரீத் சிங் முதல் கோலை அடித்தார். சிறிதுநேரம் கழித்து ஜெர்மனி பெனால்டி கார்னர் வாய்ப்பை கோலாக மாற்றி சமன் செய்தது.

நான்கு போட்டிகளைக் கொண்ட தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் ஸ்ரீஜேஷ் தலைமையிலான இந்திய அணி 6 -1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, மகளிர் பிரிவில் இந்தியா ஜெர்மனியிடம் 2 – 0 என்ற கோல் கணக்கில் தோற்றுப் போனது.

<><><><>

ஸ்விஸ் ஓபன் பேட்மிண்டன் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் அஸ்வினி பொன்னப்பா – சாத்விக் சாய்ராஜ் ரங்கி ரெட்டி இணை முதல் செட்டில் வெற்றி பெற்று இரண்டாம் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

இந்த இணை முப்பத்து எட்டே நிமிடங்களில் இந்தோனேஷிய இணையை 21-18, 21-18 என்ற செட் கணக்கில் வென்றது.

அதேநேரத்தில் பிரணவ் - சிக்கி ரெட்டி இணை தோற்றுப் போனது.

ஆடவர் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் இந்திய வீரர் கிடாம்பி ஸ்ரீகாந்த், மற்றொரு இந்திய வீரர் சமீர் வர்மாவை எதிர் கொள்கிறார்.

ஹெச் எஸ் பிரணாய் - நெதர்லாந்து வீரர் **Mark caljouw -** வை எதிர்கொள்கிறார்.

சவ்ரவ் வர்மா – சுவிட்சர்லாந்து வீரர் **Christinan Kirchmayr** - ஐயும், அஜய் ஜெயராமன் - தாய்லாந்தின் **Thammasin –** யும் எதிர்கொள்கின்றனர்.

மகளிர் பிரிவில் பி வி சிந்து – துருக்கியின் **Neslihan Yigit–**யையும், சாய்னா நேவால் - தாய்லாந்தின் **Chaiwan –** ஐயும் சந்திக்கின்றனர்.

<><><><>

ஜம்மு கஷ்மீரில் நேற்று நிறைவடைந்த கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டுப் போட்டியில் ஜம்மு கஷ்மீர் 11 தங்கம், 18 வெள்ளி, 5 வெண்கலப்பதக்கங்களுடன் பதக்கப் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

<><><><>

எகிப்து தலைநகர் கெய்ரோவில் நடைபெறும் உலகக்கோப்பைக்கான துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்திய வீராங்கனை மனிஷா கீர் ட்ராப் பிரிவில் ஏழாவது இடத்தைப் பிடித்துள்ளார்.

**<><>END OF NEWS<><>**